அதே சமயத்திலே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக அந்த Gas Cylinder-களை supply செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழகத்திலே உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிக்குமார், short ஆகக் கேளுங்கள். Supplementary question இது. கேட்பதைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. து. ரவிக்குமார்: மகளிர் சுய உதவிக் குழுக்கள் அந்த Gas Agency-களை எடுத்து நடத்த முன்வந்தால், அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதையும் உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Gas Agency எடுக்க வேண்டுமென்று சொன்னால் அது private-ஆக இருந்தாலும், அரசாங்கமாக இருந்தாலும் அதற்கென சில விதிகள் இருக்கின்றன. அதற்கு godown தேவை; அவற்றை display செய்வதற்காக ஒரு தனி அறை தேவை; இப்படியெல்லாம் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் பிரகாரம்தான் ஓர் அரசாங்கம் செய்ய முடியும். அவற்றை எடுத்துக்கொண்டு கிராமப் பகுதிகளுக்குப் போகிறபோது, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக அவற்றை அனுப்ப முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அதையும் முறைப்படுத்துவதற்கு இந்த அரசு மேற்கொண்டு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

திருப்பணி

***24218—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 19

பெரணமல்லூர் தொகுதி, மடம் கிராமம், அருள்மிகு தடாகபுரீஸ்வரர் ஆலயத்தினைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மடம் கிராமத்தில் அருள்மிகு தடாகபுரீஸ்வரர் திருக்கோயில் நிருவாகம் இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நிர்வாக செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்திட வேண்டித் திட்டமிடப்பட்டு, ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 20-9-2007 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆகவே, தொல்லியல் துறையினுடைய அனுமதி பெற்று திருப்பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு தடாகபுரீஸ்வரர் ஆலயத்தினை, அதிலும் குறிப்பாக, சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்கள் ஆண்ட பூமியில், குறிப்பாக வட தமிழகத்தில், சம்புவராயர்கள் ஆண்ட பகுதியாக இருக்கிற இந்தப் பகுதியில், அந்த மன்னர்களுடைய வரலாற்றுக் கல்வெட்டைக் கொண்டிருக்கின்ற மிகப் பழமை வாய்ந்த அந்தக் கோயில், கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே, குறிப்பாக, அவாள் ஆட்சியில்—அந்த அவாள் ஆட்சியில்கூட—அது கண்டுகொள்ளப்படவில்லை. ஆனால், இந்த ஆட்சியில் கோரிக்கை வைத்தவுடனே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, திருப்பணிகள் தொடங்கப்பட்டிருப்பதை இங்கே பாராட்டி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பணம் ஒதுக்கிய இந்தப் பகுத்தறிவு ஆட்சிக்குப் பாராட்டைச் சொல்லி, முதல்வருக்கும், அமைச்சருக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.